
*ISSN No. : XXXXXXXXX* *அவையம் 1 (2017) p.no. 32 - 37*

புதிய அவையம்



# சமயச் சொல்லாடல்கள் கட்டமைக்கும் விலங்கின நடத்தைக் கூறுகள்

**முனைவர் சு. சிவசந்திரகுமார்,**

**உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,**
**தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர்-635 601.**

**கட்டுரை பெறப்பட்டது: *22.12.2016*** **ஏற்கப்பட்டது: *05.05.2017***

## முன்னுரை

சமயங்கள் தங்களுக்கான தொன்மங்களைப் பெரும்பாலும் விலங்கினங்களிடமிருந்து வருவித்துக் கொள்கின்றன. ரிஷபதேவர், பசுபதி போன்ற சொல்லாட்சிகள் இவற்றை எண்ணிச் சொல்லும் சான்றுகளாகும். ரிஷபம் (காளை) தெய்வ வணக்கங்களில் இடம் பெறுவதைப் போல எருமையும் தெய்வ நிகழ்வுகளில் இணைக்கப்பட்டுள்ளது. பண்பு அடிப்படையில் பகுக்கப்பட்டதாயினும் தெய்வ சக்தி பாற்பட்டது என்ற நோக்கில் இவ்விரு விலங்குகளும் சமயச் சொல்லாடல்களில் பயன்படுகின்றன என்பதை மறுக்கவியலாது. ஒரு சமய சொல்லாடலில் ஏற்றுக் கொள்ளப்படும் விலங்கு பிறிதொரு சமயச் சொல்லாடலில் வேறுபொருளைத் தந்து நிற்கிறது. சான்றாக பெருந்தெய்வ வழிபாட்டில் (வைணவம்) பன்றி ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திருமால் வராகமாக அவதாரமெடுத்துள்ளார். ஆயின் சிறுதெய்வ வழிபாட்டில் ‘பேய்கள்’ பன்றியின் உருவில் வரும் என்ற நம்பிக்கை முன்னையக் கருத்தை முறியடிக்கச் செய்கின்றது.

**i) பெருந்தெய்வம் - வைணவம் - வராகம் அவதாரம்**

**ii) நாட்டார் தெய்வம் - சிறுதெய்வம் - பன்றி - பேயின் வாகனம்**

இத்தகைய சொல்லாடல்களின் வெளிப்பாடு விலங்கினப் பண்புகளை

நிர்ணயிக்க 'சமயங்கள்' வழிகோலுகின்றனவோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றது. இது போன்ற சொல்லாட்சிளை எடுத்து அடுக்கும் போது சமயச் சொல்லாடல்களில் மட்டுமல்லாது சாதாரண மக்களின் வழக்கிலும் நரி 'தந்திரம்' மிக்க ஒரு விலங்கினமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

சமயச்சொல்லாடல்களில் நரி ஆசீவக சமயத் தொடர்புடையது என்பதை எடுத்துச் சொல்லும் இலக்கியச் சான்றுகள் பல உள. அந்த வகையில் ஒரு சமயச் சொல்லாட்சியில் இடம் பிடித்த விலங்கினம் எப்படி சாதாரண மக்களாலும் வெறுக்கத்தக்க அல்லது சூழ்ச்சிப் பாத்திரமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்குப் பிற சமயங்களின் பங்களிப்பு என்னென்ன என்பதை எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இதன் மூலம் பல விலங்குகள் பறவைகளின் நடத்தையியல்சார் பண்புகளை அடுக்கிச் சொன்ன இலக்கியத்தில் சமயச் சொல்லாடல்கள் காரணமாக இல்லாத சில பண்புகளையும் அவை மேல் திணித்து விட்டனவோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. இதனால், உவமைகள் எல்லாம் உண்மைகள் ஆகாமல் குறியீடுகளாகிக் குவிந்துள்ளனவோ என்ற எண்ணம் ஏற்படுகின்றது. மனிதனுக்குப் பண்புகளையும் நடத்தைகளையும் கற்பித்த இவ்விலக்கியம், விலங்கினங்களையும் விட்டு வைக்கவில்லை என்பதை இலக்கிய அடிகள் கொண்டு விலங்கின பண்புகளை நடத்தையியல் அடிப்படையில் பொருத்திப் பார்க்கும் முயற்சியில் இக்கட்டுரை பயணிக்கிறது.

**அசிதகேச கம்பாளரும் ஆசீவக அடையாளமும்**

ஆசீவகம் பற்றி ஆராய்ந்த நெடுஞ்செழியன் ஆசீவகக் குறியீடாக யானை அடையாளம் காணப்பட வேண்டிய தேவையைப் பல இடங்களில் விளக்கியுள்ளார். இத்தேவை ஒருபுறமிருக்க, இவ்வாசீவகக் கோட்பாட்டை வளர்த்தெடுத்தவர்களில் ஒருவராக அசிதகேச கம்பாளர் திகழ்கிறார். இப்பெயருக்கான மொழிபெயர்ப்பு 'நரிவெரூஉத் தலையார்' என்பதாகும் என்பதை எடுத்துச் சொல்லும் நெடுஞ்செழியன் ஏன் நரியை விடுத்து யானையை அடையாளச் சின்னமாக்கினார் என்பது விளங்கவில்லை. நரிவெரூஉத் தலையார் எனும் பெயரை விரித்துப் பார்க்கும் போது நரிகளே அஞ்சி (வெரூஉ - அஞ்சுதல்) ஓடக் கூடிய தலைமையைச் சான்றவர் எனும் பொருள் கிடைப்பதாகக் கூறியுள்ளார்.

*(இரா.சக்குபாய் (பதி) க.நெடுஞ்செழியனின் 'ஆசீவகமும் ஐயனார் வரலாறும்' பாலம் பதிப்பகம். சென்னை 2014.)* எனவே, நரியைக் குலக் குறியாகக் கொண்டவர்களாகிய ஒரு சிந்தனை மரபைப் புறங்கண்ட தலைமை சான்றவர் எனும் பொருள் கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இப்பொருத்தம் அவ்வளவு சிறப்பான பொருத்தமாக இல்லை என்பதை'நரிமகன் அல்லனோ கேசகம்பாளன்' எனும் சாத்தனாரின் சாட்சி மெய்ப்பித்து விடுகின்றது. இஃது ஒருபுறம் மறுபுறம் நரியின் தலையை முகமாகக் கொண்டவர் என்பதைச் சொல்லியும் ஏன் யானையை அடையாளப்படுத்துகிறார் என்பதற்கு யானை $X$ முதலை, யானை $X$ சிங்கம் ஆகிய விலங்குகளது மோதல் குறித்த உருவகத் தொன்மங்கள் அக்காலத்துச் சமய மோதல்களின் குறியீடுகளே என்றுரைப்பார். யானை $X$ முதலை போன்ற விலங்கினத் தொன்மங்கள் சமய மோதல்களின் குறியீடுகளே என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆயின் மேற்கண்ட யானை $X$ முதலை, யானை $X$ சிங்கம் போன்ற உருவகத் தொன்மங்களுடன் ஆசீவகச் சமயச் செழிப்பினை நோக்கும் போது மிகவும் பிற்பட்ட காலமாக அடையாளப்படுகின்றன என்ற நிலையில் ஆசிவகர்களுக்கு மிக நெருக்கமாக நரியே குறியீடாக இருந்திருக்கலாமோ என்ற ஐயம் தோன்றுகின்றது. நீலகேசி மணிமேகலை போன்ற காப்பியங்களில் அதிகமாக ஆசீவகம் பற்றிப் பேசப்பட்டுள்ளது. இருப்பினும் யானைத் தொன்மம் எழுந்த சூழல் சரியாக ஆசீவகச் சின்னம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதா என்ற ஐயப்பாட்டைத் தோற்றுவிக்கிறது. பௌத்தரான சாத்தனாரின் சான்று கேசகம்பாளன் நரியின் மகன் என்பதை உறுதிபடச் சொல்லும் போது ஏன் பிற்கால யானைத் தொன்மத்துடன் அதை இணைக்க வேண்டும். புறச் சான்றுகள் யானையுடன் மிக நெருங்கியதாக இருந்தாலும் அகச் சான்றுகள் (இலக்கியங்கள்) பெரும்பாலும் ஆசீவகத்தை நரியுடனே இணைத்துப் பார்த்துள்ளன.

### சிலம்பு கட்டமைக்கும் ஆசீவக அடையாளம்

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் சமயச் சார்புடைய பாத்திரங்களைத் தெரிவு செய்தால் கவுந்திக்குக் கணிசமான ஓர் இடமுண்டு. பிற கடவுளர்களைப் பரவேன் என எதிர்மறையாகக் கூறுவது அவர் வழிபாட்டில் குறையுள்ளது என்பதைக் காட்டுமென்றும் பிற சமய வெறுப்பு கவுந்தியின்

முதிர்ச்சியின்மையை உணர்த்துகிறது. இப்புகழ் மொழியைக் கேட்ட சாரணர், ''பவந்தரு பாசம் கவுந்தி கெடுக' பந்தம் அறுக என வாழ்த்தி விடை பெற்றனர் என்பது சிலப்பதிகாரக் குறிப்பு. இச்சிலம்பினுள் கவுந்தியடிகள் இட்ட சாபம் நினைவு கூரத்தக்கது.

அது வம்பப்பரத்தைக்கும் வறுமொழியாளனுக்கும் வழங்கப்பட்டது. அச்சாபம் முதுநரிகளாக மாற வேண்டும் என்பது. இவ்விடத்தில் வம்பப் பரத்தையும் முதுநரிகளும் போன்ற சொல்லாட்சிகள் உற்றுநோக்குதற்குரியன. வம்பப்பரத்தை என்பதில் இடம்பெறும் வம்பு என்னும் உரிச்சொல் 'வம்பு நிலையின்மை' எனும் பொருளைத் தருவதும் நிலையின்மை நரிகளோடு தொடர்புடையதாகத் திருத்தக்க தேவர் நரிவிருத்தம் பாடியமையும் நினைவில் கொள்ளத்தக்கன.

பிறசமய வெறுப்புக் காரணமாகவே கவுந்தியடிகள் நரிகளாக மாற வேண்டும் என்ற சாபம் கொடுத்துள்ளாரோவென எண்ணத் தோன்றுகிறது. இது (சமணம் X ஆசீவகம்) சமயச் சொல்லாடல்களில் விலங்கினங்களின் பண்புகளைப் பதிவதாக அல்லது சமய அடையாளங்களைச் சரமாறியாகத் தாக்குவதாகும் அமைந்துள்ளன.

இவ்விடத்தில் இதை சாபமாகக் கொள்ள வேண்டியதில்லை வரமாகக் கருதலாம் என்ற மாற்றுக் குரல் ஒலிக்கலாம். ஏனெனில் அசிதகேச கம்பாளனே நரியின் மகன் என்றால் அந்த உருவத்தைப் பெறும் இவ்விருவருக்கும் அது சாபமாகாது வரமாகும் என்பதாகக் கருதலாம்.

இவ்விடத்தில் உள்ள இலக்கிய அடியானது வம்பப்பரத்தை என்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பரத்தை என்னும் சொல்லாட்சி இழிவு சிறப்புகளாகப் பிற சமயத்தைக் கேலிப் பொருளாகப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அசிதகேச கம்பாளன் - நரியின் மகன்
வம்பப்பரத்தை - நரியானாள்

என்பதை இப்படித்தான் பொருள் கொள்ள முடியும். இவ்வடிகள் முழுவதும் கவுந்தி கூற்றல்ல. படைப்பாளியின் கூற்று பாத்திரக் கூற்றாகாது என்று எழும் குரல்களுக்கு இக்கட்டுரை இளங்கோவின் சமயம் குறித்த கருத்துகளைக் கவனிக்கப் பரிந்துரை செய்கிறது. அறுதிப் பெரும்பான்மை அவர் சமணராகலாம் என்பது ஆய்வுத் திண்ணம். வம்பப் பரத்தையை - நரியாகும் படி கவுந்தியிட்ட சாபம் என்பது ஆசீவகச் சமய அடையாளச் சின்ன அழிப்பின்

உச்சமே ஆகும். இக்கொள்கையைப் பின்னால் வந்த காப்பியக்காரர்களும் கைகொண்டனர் என்பதற்குத் திருத்தக்கதேவர் திருந்திய சான்றாவார்.

**நரி விருத்தமும் பூரணரின் புகழுடம்பும்**

நரிவிருத்தத்தின் முதற்பகுதி நரியைப் பற்றிய கதையையும், பின்னர் அதன் சார்பாக வேறு பதினெட்டுக் கதைகளையும் கொண்டிலங்குகின்றது. இவையனைத்தும் ஐம்பது செய்யுட்களாலே கூறப்படுகின்றன. இவற்றுள் ஒன்று முதல் எட்டு வரையுள்ள செய்யுள்கள் மட்டுமே நரிவிருத்தங் கூறுவன. மற்றைய பாடல்கள் வேறு கதைகளையும் நீதிகளையும் கூறுகின்றன. முதல் எட்டுப் பாடல்களின் இறுதியில் இடம்பெறும் பாடல் பின்வருமாறு,

*"அத்தியு மரவின் வீழ்ந்த வேடனும்*
*வேடன் கொன்ற*
*துத்திமா நாகந் தானுங் கிடப்பவிற்*
*குதையைக் கவ்விச்*
*செத்தவிந் நரியைப் போலச் செய்பொரு*
*ளீட்டு வார்கள்*
*சித்தம்வைத் தறங்கள் செய்யார்*
*தேர்ச்சியின்*
*மாக்க ளந்தோ"*

(வீ.ஆறுமுஞ் சேர்வை (உரையாசிரியர்) 'நரிவிருத்தம்' ஜைன இளைஞர் மன்றம், சென்னை. மறுபதிப்பு.**1975**.) என்பதாக இடம் பெற்றுள்ளது. தெளிவில்லாத மாக்கள் என்று குற்றம் சாற்றப்படுபவர்கள் நரியைப் போன்றவர்கள். மனம் பொருந்தி அறங்கள் செய்யாதவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடத்து தெளிவில்லாத மாக்கள் ஆசீவக நெறியைப் பின்பற்றியவர்கள் என்பதை எடுத்துச் சொல்லும் ஒரே சான்று நீலகேசி ஆகும்.

உரையா னிறைவ னுணலு மிலனாய்த்
திரையா னரையான் றெரிவில் ஓருவம்
வரைய னகை வானிடுவில் லனையன்
புரையா லறிவிறி புகழ்
பூரணனே *(நீலகேசி 673)*

என்ற *673* செய்யுள் மூலம் தன்னுடைய இறைவன் பேசுவதுமில்லை. உண்பதுமில்லை. அவர் உடலில் *(முதிர்ச்சியிலான)* சுடுக்கமுமில்லை. நரையுமில்லை. அவன் உடல் *(அழகு)* ஓவியனால் எழுதப்படாத வானவில் போன்றது என்று உரைப்பதாகும்.

ஊழ் எனும் விதி ஆசீவகர்கள் மதக்கருத்தின் மைல்கல். கர்மா எனும் வினை சமணர்களுக்குரியது. மேற்கண்ட சான்றுகளும் இவற்றை விளக்கி நிற்கின்றன. கர்மா எனும் வினையை அழிக்க அறங்கள் செய்ய வேண்டும் என்பது சமணர் கொள்கை. 'ஆவது ஆம்', 'ஆமாங்கு ஆம்', 'ஆந்துணை ஆம் 'ஆங் காலத்து ஆம்' என்பன ஆசிவகர்கள் கூற்று. இவ்விரு கூற்றுகளும் நரிவிருத்தம்

$X$ நீலகேசியில் எதிர்பட்டு நிற்பதை இச்செய்யுள் தரும் உரைகளால் ஊர்ஜிக்கலாம். இவ்விடத்தில் சமணரான திருத்தக்கதேவர் தேர்ச்சியின் மாக்களந்தோவென ஆசீவகர்களை அறிவிக்க எடுத்துக்கொண்ட நரிக்கதையின் உவமையானது நரியின் நடத்தையியல் கூறுகளை மனதில் கொண்டு இலக்கியங்களில் பயன்படுத்திய வரிகளாகத் தெரியவில்லை. மாறாக, ஆசீவகத்தின் அடையாளம் நரி என்பதை நன்குணர்ந்து அவ்வடையாள அழிப்பின் அடுத்தகட்டமே நரிவிருத்தமோ எனும் அளவிற்கு ஆசீவகர்களின் மீது கொண்ட வெறியை நரியைக் கொண்டு தீர்த்துக் கொண்டாரா என்பதாகத் தெரிகின்றது.

**தொகுப்புரை**

- சமயங்கள் விலங்கினத் தொன்மங்களைத் துணையாகக் கொண்டுள்ளன.
- நரியினை ஆசீவகத் தொன்மமாக மணிமேகலை அடையாளப்படுத்துகிறது.
- சமயங்களின் விலங்கின அடையாளங்கள் பிறசமயங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டன.
- ஒவ்வொரு விலங்கிற்கும் ஒவ்வொரு பண்பு கற்பிக்கப்படுகின்றது. ஆசீவக அடையாள சின்னமாக நரிக்குத் தந்திரமும் தனிமையும் கற்பிக்கப்பட்டுள்ளன.
- சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் சமணபாத்திரம் (கவுந்தி) நரியைத் தாக்கிப் பேசுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. ஆசீவக சமய அடையாள அழிப்பின் உச்சமாகும்.
- நரிவிருத்தம் பாடிய திருத்தக்கதேவர் நிலையாமையைப் பாட நரியின் மீது இல்லாத அதாவது ஆசீவகர்களின் பண்பிற்கு நரியை உவமித்துள்ளார்.

**முடிவுரை**

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் போன்ற குரல்களையும் திறனாய்வுத் தராசிலிட்டுத் தகுதிச் சான்று தரும் வேளையில் கழுவேற்றம் செய்தால் கழுமரம் சாட்சியாகிவிடும் என்றஞ்சியோ என்னவோ, ஆசீவகச் சமயத்தின் அரிச்சுவடே இல்லாத அளவு அழித்தொழித்துள்ளன அச்சமயத்தை எதிர்த்த சமயங்கள். அடையாள அழிப்பின் உச்சம் ஆசீவகம் என்னும் ஒரு மதிப்பெண் விடைக்கு வினாவையன்றிப் பிரிதொன்றை அறிய இயலாதபடி ஆகிய ஆசீவகத்தில் நரிதந்திரம் எச்சமல்ல மிச்சம்.